பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 07 2024 7 15
வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. வீரதீர செயல்கள் மற்றும் சிறப்பான பணிகளில் ஈடுபட்டோருக்கான விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்குகிறார்.

2. நாட்டின் வளர்ச்சிப் பணிகளை மக்களிடம் கொண்டு செல்வதில் ஊடகங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. நீட் நுழைவுத் தேர்வு வினாத்தாள் முறைகேடு தொடர்பாக பட்னா எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியின் 4 மாணவர்களை சி.பி.ஐ. கைது செய்துள்ளது.

4. அருணாச்சலப்பிரதேச சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

5. அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - அர்ஜுன் கதே இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

வீரதீர செயல்கள் மற்றும் சிறப்பான பணிகளில் ஈடுபட்டோருக்கான விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்குகிறார்.

புதுதில்லியில் குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் அவர் இந்த விருதை வழங்க உள்ளார்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சிப் பணிகளை மக்களிடம் கொண்டு செல்வதில் ஊடகங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தேவையற்ற செய்திகளில் ஊடகங்கள் அக்கறை செலுத்துவது கவலையளிப்பதாக கூறினார்.

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதில் இதழியலின் பங்களிப்பை அவர் சுட்டிக்காட்டினார்.

ஊடகங்கள் ஒருதலைப்பட்சமாக செயல்படக்கூடாது என்று அவர் அறிவுறுத்தினார்.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் குறித்த செய்திகளை வெளியிடுவதில் ஊடகங்கள் மறுமதிப்பீடு செய்ய வேண்டும் என்றும், அவையில் ஏற்படும்

இடையூறுகளுக்கு முக்கியத்துவம் அளித்து செய்திகளை வெளியிடும் போக்கை கைவிட வேண்டும் என்றும் திரு. ஜக்தீப் தங்கர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

போதைப் பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற போதைப்பொருள் கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்பு மையத்தின் உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் அவர் பங்கேற்றுப் பேசினார்.

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தேசிய போதைப்பொருள் தடுப்பு மையத்தின் சார்பில் **Manas 1933** என்ற உதவி எண்ணை அறிமுகம் செய்து வைத்தார்.

இதன்மூலம் போதைப்பொருள் புழக்கம் குறித்து தகவல் அளிக்கலாம் என்றும், போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு

அளிப்பது குறித்து ஆலோசனை பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் மேட்டுப்பாளையம் - தூத்துக்குடி இடையே வாரம் இருமுறை விரைவு ரயில் சேவையை மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் இன்று தொடங்கி வைக்கிறார்.

மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் இதற்கான விழா நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நீட் நுழைவுத் தேர்வு வினாத்தாள் முறைகேடு தொடர்பாக பட்னா எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியின் 4 மாணவர்களை சி.பி.ஐ. கைது செய்துள்ளது.

முன்னதாக இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவர்கள் முறைகேட்டில் ஈடுபட்டிருப்பது உறுதி செய்யப்பட்டதாக சி.பி.ஐ. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்களுடைய மடிக்கணினிகள் பறிமுதல் செய்யப்பட்டு தங்கியிருந்த அறைக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 4 மாணவர்களில் 3 பேர் இளநிலை மருத்துவப் படிப்பில் மூன்றாம் ஆண்டும், ஒருவர் இரண்டாம் ஆண்டும் பயின்று வருவதாக சி.பி.ஐ. அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

நாட்டில் 2030ஆம் ஆண்டுக்குள் 500 பில்லியன் டாலர் அளவுக்கு மின்னணு பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நிதி ஆயோக் அறிக்கை தெரிவிக்கிறது.

இவற்றில் 150 பில்லியன் டாலர் அளவிற்கு மின்னணு உபகரணங்களின் உற்பத்தி அடங்கும் என்று கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் மின்னணுப் பொருட்களின் உற்பத்தி 155 பில்லியன் டாலராக இருந்ததாகவும், இது கடந்த 2017ஆம் ஆண்டைவிட இருமடங்கு அதிகம் என்றும் தெரிவித்துள்ளது.

மொபைல் ஃபோன் உற்பத்தி இதற்கு முக்கிய காரணம் என்றும் நிதி ஆயோக்கின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அருணாச்சலப்பிரதேச சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

திரு. பேமா காண்டு தலைமையிலான அரசு மீண்டும் ஆட்சியமைத்த பின் இக்கூட்டத்தொடரில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது.

துணை முதலமைச்சரும், நிதியமைச்சருமான திரு. **Chowna Mein** வரும் 24ஆம் தேதி பட்ஜெட்டை தாக்கல் செய்ய உள்ளார்.

வரும் 26ஆம் தேதி வரை 6 அமர்வுகளாக அருணாச்சலப்பிரதேச சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் நடைபெற உள்ளது.

<<<<>>>>

எதிரிகளின் செயல்திட்டத்தை முறியடிக்க நமது ராணுவத்தால் பல்வேறு முன் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக முப்படைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் தெரிவித்துள்ளார்.

கார்கில் வெற்றி தினத்தின் 25ஆம் ஆண்டைக் குறிக்கும் வகையில் புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் கலந்துகொண்டு பேசினார்.

எந்த நிலையிலும் தயாராக இருக்கும் வகையில் அடிப்படைக் கட்டமைப்பு, வலுவான நடைமுறை திட்டங்கள் ஆகியவற்றை மேம்படுத்தும் திறனை ராணுவம் பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

எல்லைகளைப் பாதுகாப்பதில் ராணுவம் விழிப்புடன் இருப்பதை கார்கில் வெற்றியின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஜெனரல் அனில் சௌஹான் தெரிவித்தார்.

<<<<>>>>

பாமாயில் உள்ளிட்ட துறைகளில் மேலும் ஒத்துழைத்து செயல்படுவதென இந்தியாவும் – மலேசியாவும் முடிவு செய்துள்ளன.

இது தொடர்பாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹானை மலேசிய வர்த்தக அமைச்சர் திரு. அப்துல் கனி சந்தித்துப் பேசியபோது இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

வேளாண்துறையில் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து அமைச்சர்கள் விவாதித்தனர்.

வேளாண் பொருட்கள் மற்றும் அதைச் சார்ந்த பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகள் குறித்தும் அமைச்சர்கள் விவாதித்தனர்.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் நேரிட்ட சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். 7 பேர் காயமடைந்தனர்.

ஜால்னா – ரஜூர் சாலையில் துப்வாடி என்ற இடத்தில் பக்தர்களுடன் சென்றுகொண்டிருந்த வாகனம் ஒன்று கிணற்றுக்குள் விழுந்து இந்த விபத்து ஏற்பட்டது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.

காயமடைந்தவர்களுக்கு மகாராஷ்டிரா அரசின் செலவில் சிகிச்சை அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கனமழை காரணமாக தமிழகத்தில் நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட இத்தலார் கிராமத்தில் உள்ள குடியிருப்புகள் அருகே மண் சரிவு ஏற்பட்டது.

இதையடுத்து அப்பகுதியைப் பார்வையிட்ட மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராமச்சந்திரன், அங்கு வசிக்கும் 10 குடும்பத்தினரை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நீலகிரி மாவட்டத்தில் அதிக மழை பெய்யக்கூடிய உதகை, கூடலூர், பந்தலூர் போன்ற பகுதிகளில் பாதுகாப்பு பணியை மேற்கொள்ள மாநில

பேரிடர் மீட்புக் குழுவினர் தயார் நிலையில் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வருவாய்த்துறை, தீயணைப்புத்துறை, நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்தவர்கள் 24 மணிநேரமும் மாவட்டத்தில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

இதற்கிடையே நீலகிரி மாவட்டத்தில் இன்று மிக கன முதல் அதிகனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

மேலும் திருப்பூர், தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

அதிகனமழை எச்சரிக்கை காரணமாக நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், பந்தலூர், குந்தா ஆகிய வட்டங்களில் இன்று பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கேரளாவின் வடக்குப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வயநாடு, கன்னூர் மாவட்டங்களின் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

காசர்கோடு மாவட்டத்தில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என்பதால் கேரளா, கர்நாடகா, லட்சத்தீவு கடற்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே தெலங்கானாவில் பத்ராத்ரி, **Kothagudem** மாவட்டத்தின் பெட்டாவாஹு பகுதியில் வெள்ளப்பெருக்கில் சிக்கிய 28 பேரை தேசிய பேரிடர் மீட்புப் படையினர் 2 ஹெலிகாப்டர்கள் மூலம் நேற்று மீட்டனர்.

இந்நிலையில் தெலங்கானாவில் இன்றும் நாளையும் பல்வேறு மாவட்டங்களில் மிக கன முதல் அதிகனமழை பெய்யக்கூடும் என்று ஹைதராபாத் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பெட்டாம்பேட் என்ற இடத்தில் 207 புள்ளி 8 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - அர்ஜுன் கதே இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-4, 1-6, 10-7 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் **Christian Harrison – Vasil Kirkov** இணையை வென்றது.

---------------

ஆசியக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இலங்கையில் இன்று தொடங்குகிறது.

தம்புல்லாவில் நடைபெற உள்ள ஆட்டத்தில் இந்தியா – பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக நடைபெறும் மற்றொரு போட்டியில் நேபாளம் - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

-----------------

இலங்கை அணிக்கு எதிரான 3 போட்டிகளைக் கொண்ட ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் தொடருக்கு இந்திய அணியின் கேப்டனாக சூர்யகுமார் யாதவும், துணைக் கேப்டனாக ஷூப்மன் கில்லும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

யஷஸ்வி ஜெய்ஸ்வால், ரிங்கு சிங், ரியான் பராக், ரிஷப் பந்த், சஞ்சு சாம்சன, ஹர்திக் பாண்ட்யா, ஷிம் துபே, அக்சர் பட்டேல், வாஷிங்டன் சுந்தர், ரவி பிஷ்னோய், அர்ஷ்தீப் சிங், கலீல் அகமது, முகமது சிராஜ் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

ஒருநாள் போட்டிக்கான அணியில் கேப்டன் ரோஹித் ஷர்மா, விராட் கோலி, கே.எல். ராகுல், ஷ்ரேயஸ் ஐயர், ரியான் பராக், ஹர்ஷித் ரானா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

--------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 23 ரன் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

**<<<<The End>>>>**